# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை –600 032.
தொலைபேசி: 044–22201337/நிகரி எண்.22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

******

**முறையீட்டு மனு எண்: 189/2018/மா**
**ஆணை நாள்: 04–03–2019**

1. **திருமதி. ச. முருகேஷ்வரி,**
   **திண்டுக்கல்.**
2. **திரு. எஸ். ரகுராம கிருஷ்ணன்**
   **திருச்சி.** --- **முறையீட்டு மனுதாரர்கள்**

**திரு. எம். ஓ. மாயத் தேவர்,**
**திண்டுக்கல்.** --- **எதிர் மனுதாரர்**

திண்டுக்கல் மாநகராட்சி, கிழக்கு கோவிந்தாபுரம், ஆர். எம். காலனி, எண். L 141 என்ற முகவரியில் வசிக்கும் திருமதி. ச. முருகேஷ்வரி மற்றும் திருச்சி மாநகராட்சி, கண்டோன்மென்ட், பரணி பிரஸ்டீஜ் அபார்ட்மெண்ட்ஸ், வார்னஸ் ரோடு, எண்.25 என்ற முகவரியில் வசிக்கும் திரு. எஸ். ரகுராமகிருஷ்ணன் ஆகியோரது 14.8.2018 நாளிட்ட முறையீட்டு மனுக்கள் இம்முறைமன்ற நடுவத்தில் 16.8.2018 அன்று பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.0189/2018 என எண்ணிடப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அறிக்கை பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை:

முறையீட்டு மனுதாரர்கள் தங்களது முறையீட்டு மனுவில், திண்டுக்கல் மாநகராட்சி, பிள்ளையார்பாளையம், கீழ்சரகம், வார்டு எண்.2, பிளாக் எண்.6, Old T.S. No 340/1ல் தங்களுக்கு பாத்தியப்பட்ட மனைக்கு வடபுறம் மற்றும் முத்துலக்க ஆசாரி வகையறாவிற்கு பாத்தியப்பட்ட மனைக்கு தென்புறம் உள்ள புதிய T.S. No 1 பொது பாதையை ஒட்டியுள்ள அரசு ஓடை

புறம்போக்கு நிலத்தை மாயாண்டி என்ற தனிநபர் 163 அடி நீளத்திற்கும் 6 அடி அகலத்திற்கும் சிறுசிறு குடிசைகளாக 14 வீடுகளை கட்டி வணிக ரீதியாக வாடகைக்கு விட்டுள்ளார் என்றும், தனி நபர் ஆக்கிரப்பினை அகற்றி அரசு ஓடைபுறம்போக்கு நிலத்தை மீட்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்கள்.

முறையீட்டு மனுதாரர்களின் முறையீட்டு மனு மீதான அறிக்கையினை. இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்க திண்டுக்கல் மாநகராட்சி ஆணையருக்கு 24.08.2018 நாளிட்ட அறிவிப்பாணையின்படி ஆணையிடப்பட்டது.

ஆணையர், திண்டுக்கல் மாநகராட்சி 25.10.2018 நாளிட்ட தனது அறிக்கையில், திண்டுக்கல் நகர நில வரித் திட்டம், தனி வட்டாட்சியர் அவர்களின் 28.06.2018 நாளிட்ட கடிதத்தில் மேற்படி நிலம் அரசு ஓடை புறம்போக்கு என்றும், அதில் ஆக்கிரமித்து வீடுகள் கட்டப்பட்டுள்ளதாகவும், மேலும் மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தனி வட்டாட்சியரின் கடிதத்தின் அடிப்படையில், திண்டுக்கல் மாநகராட்சியால் மனுதாரர் திரு. ரகுராமகிருஷ்ணன் அவர்களின் மனு பரிசீலனை செய்யப்பட்டு, திண்டுக்கல் மாநகராட்சி இளநிலை பொறியாளர் மற்றும் நில அளவை நகர் சார் ஆய்வாளரால் மேற்கண்ட இடம் புலத் தணிக்கை செய்யப்பட்டது என்றும், மேற்படி வார்டு எண்.2, பிளாக் எண்.6. நகரளவு எண்.79ல் பழைய சர்வே எண்.341ல் சர்க்கார் ஓடைபுறம்போக்கில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளும் நில அளவை சார் ஆய்வாளரால் அளவீடு செய்யப்பட்டு 41 குடியிருப்பு வீடுகள், மேற்படி அரசு ஓடை புறம்போக்கில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக நகர் சார் ஆய்வாளர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்றும், ஓடை புறம்போக்கிலுள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்ற முதற்கட்ட நடவடிக்கையாக, ஆக்கிரமிப்புதாரர்கள் பல வருடங்களாக மேற்படி இடத்தில் குடியிருந்து வருவதால் அவர்களுக்கு மாற்றிடம் ஒதுக்கீடு செய்துவிட்டு மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்ற அடிப்படையில் மேற்கண்ட ஆக்கிரமிப்புதாரர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்ய கேட்டு திண்டுக்கல் மேற்கு வட்டாச்சியருக்கு 25.10.2018ல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், இச்சூழ்நிலையில் ஆக்கிரமிப்புதாரர்களுக்கு வருவாய் துறையினரால் மாற்றிடம் ஒதுக்கீடு செய்யப்பட்ட பிறகு, திண்டுக்கல் மாநகராட்சி, வருவாய் துறையினருடன் இணைந்து மேற்கண்ட ஓடை புறம்போக்கில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அப்புறப்படுத்த தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவத்தின் 06.12.2018 நாளிட்ட அழைப்பாணையின்படி முறையீட்டு மனுதாரர்கள் 28.01.2019 அன்று இம்முறைமன்ற நடுவத்தில், விசாரணைக்கு ஆஜரான போது எதிர்மனுதாரர் ஒரு பொது ஊழியர் என்ற வரம்பிற்குள் வராததாலும், ஆக்கிரமித்துள்ள நிலம் அரசு ஓடை புறம்போம்போக்கு என்பதாலும் தங்களது முறையீடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் அதிகார வரம்பிற்குட்படாது என்பதை தெரிந்து கொண்டோம் என்றும், ஆக்கிரமித்துள்ள நிலம் அரசு ஓடை புறம்போக்கு என்றும், அது திண்டுக்கல் மேற்கு வட்டத்தை சேர்ந்ததென்றும் தெரிவித்தார்கள்.

இந்நேர்வில், மனுதாரர்களின் கோரிக்கை, பெறப்பட்ட அறிக்கை மற்றும் முறையீட்டு மனுதாரர்களின் வாக்குமூலம் ஆகியவைகள் பரிசீலிக்கப்பட்டதில், எதிர்மனுதாரர் ஒரு பொது ஊழியர் என்ற வரம்பிற்குள் வராததாலும், எதிர்மனுதாரர் ஆக்கிரமித்துள்ள நிலம் அரசு ஓடை புறம்போக்கு என்பதாலும், இது தொடர்பாக தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு திண்டுக்கல் மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்யலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019-ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 4-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திருமதி. ச. முருகேஷ்வரி,
க/பெ சண்முகம்,
L- 141, R.M. காலனி, கிழக்கு கோவிந்தாபுரம்
திண்டுக்கல்.
2. திரு. எஸ். ரகுராம கிருஷ்ணன்,
த/பெ. R. சுந்தரராஜன்,
எண்.25, வார்னர்ஸ் ரோடு, பரணி பிரஸ்டீஜ் அபார்ட்மெண்ட்ஸ்,
கண்டோன்மெண்ட், திருச்சி.
3. மாவட்ட ஆட்சியர்,
திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல்.
4. ஆணையர்,
திண்டுக்கல் மாநகராட்சி, திண்டுக்கல்.

5. வட்டாட்சியர்,
திண்டுக்கல் மேற்கு வட்டம், திண்டுக்கல்.

**நகல்**
முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
செயலர் நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு 3/ இ. கோ. / உதரி